கவிராச பண்டிதர்
செகவீர பாண்டியனார்

28629

தோற்றம்
10—3—1886

மறைவு
17—6—1967

வாழ்க்கைக் குறிப்பு

தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடு

கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனாரின் வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் 10-3-1886இல் பிறந்தார்.

ஊர் : திருநெல்வேலி மாவட்டத்தில் மணியாட்சிக்கு வட கிழக்கே ஒருகல் தொலைவிலுள்ள ஒட்டநத்தம் இவர் தம் சொந்த ஊராகும்.

பெற்றோர் : தந்தையார்—பெருமாள்சாமி; தாயார்—ஆவுடையம்மாள்.

மரபு : கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் வீரபாண்டிய கட்டபொம்மன் மரபில் தோன்றியவர். 1801ஆம் ஆண்டு பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை ஆங்கிலேயர் அரண் செய்தனர். தமிழக வீரர்க்கும் ஆங்கிலேயர்க்கும் கடும்போர் நடந்தது. கட்டபொம்மன் மரபிலே தோன்றிய அஞ்சா நெஞ்சினர் ஒருவர் அறுபது வயதுக்கும் மேற்பட்டவர் தம் இன்னுயிரையும் எண்ணாமல் வீரத்துடன் போராடிக் கொண்டிருந்தார்; பொழுது சாயும்

நேரம்; பொல்லாப் பகைவன் ஒருவன் அவர்மீது குண்டொன்றை வீசினான்; குற்றுயிராக வயல் வரப்பில் வீழ்ந்தார் அவர்; அவ்வழியே ஆங்கிலேயப் படைத் தலைவன் ஒருவன் குதிரைமேல் தாவி வந்தான்; ஆவி அலமந்த நிலையில் கையிற் பிடித்த நீண்ட வாளோடு கிடக்கும் அவ்வீரரைக் கண்டான்; அருகில் வந்தான்; 'கையில் உள்ள வாளைக் கொடு' என அதட்டிக் கேட்டான்; 'என்னால் எழுந்து தர முடியாது. நீயே குனிந்து வாங்கு' என்றார் அவ்வீரர். குதிரைமீதமர்ந்தவாறே குனிந்து கேட்டான் அப்படைத் தலைவன்; இதுவே தக்க சமயம் என்று கருதிய அவ்வீரர், தம் கை வாளை ஓங்கி அப்படைத் தலைவனின் தலையைத் துண்டித்தார். குதிரையையும் கொன்றார்; சிறிது வினாடியில் அவர்தம் நல்லுயிரும் நீங்கியது! இத்தகு வீர உள்ளத்தை, வெற்றிச் சாவை வெள்ளையர் உள்ளிட்ட அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர்!

இவ்வரிய மறக்குடியில் தோன்றிய மாண்புறு புலவரே கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் ஆவார்.

கல்வி : பாண்டியனார் தம் ஐந்தாம் வயதில் பள்ளி புகுந்தார். திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு. தாளோ புத்தகமோ ஏதும் இல்லை. எல்லாவற்றையும் பனை ஓலையில் எழுதிப் படிக்கின்ற நிலையிலேயே இவரது தொடக்கக் கல்வி அமைந்தது. இவர் இளமையிலேயே கண்ணும்கருத்துமாய்ப் பயின்று வந்தார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, உலக நீதி போன்ற நீதி நூல்கள் பாடமாய் அமைந்தன. தாயின் நல்ல வழி காட்டுதலாலும், அரவணைப்பினாலும் தீய பழக்கங்கள் ஏதுமின்றி இளமையிலேயே நல்லொழுக்கச் சீலராய்த் திகழ்ந்தார். ஆயினும் ஐந்தாம் வகுப்போடு பள்ளிப் படிப்பு முற்றுப் பெற்றுவிட்டது. கல்விக் கட்டுப் பாடுகள் கழிந்த பின்னர் சும்பும் சிலம்பும், மல்லும் வில்லும்

எனப் பொழுதைக் கழித்தார். ஒருநாள், குளக்கரையில் அவர் உலாவிக் கொண்டிருந்தபோது ஓலைச் சுவடியில் இருந்த ஒரு பாட்டலைக் கண்டார்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்

இந்தப் பாட்டலைப் படித்ததும் புதிதாக அவர் உள்ளத்தில் ஒரு கருத்து தோன்றியது. "கல்வி ஏட்டிலும் பாட்டிலும் இல்லை; எழுத்திலும் சொல்லிலும்கூட இல்லை; மனிதனுடைய உள்ளத்திலே உறைந்துள்ளது; உள்ளம் தெளிந்து ஊக்கத்துடன் முயன்றால் எல்லாவற்றையும் எளிதில் பெறலாம்; பெரிய பேறெல்லாம் மனிதனுக்கே தனி உரிமையுள்ளன என்பன போன்ற சிந்தனைகள் முகிழ்க்கத் தொடங்கின. இந்தச் சிந்தனை மறுபடியும் அவருக்குக் கல்வியின்மேல் நாட்டத்தை ஏற்படுத்தியது. எனவே, தாம் செய்து வந்த மளிகைக் கடைப் பணிமகன் வேலையை நிறுத்திவிட்டு மீண்டும் தாமே கல்வி கற்க முயன்றார். இந்த வகையில் தாயுமான சுவாமிகள் பாடல்கள் முதலாக பற்பல நூல்களை அவரே கற்கத் தொடங்கினார். பிறகு தம் ஊருக்கு வந்திருந்த சிவானந்த சுவாமிகள் என்னும் முனிவரிடமும், இலக்கண முத்தையா என்னும் பெரியாரிடமும் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார்.

பிற மொழிப்புலமை

கவிராச பண்டிதர் தமிழ்மொழியில் புலமை பெற்று விளங்கியதோடு அமைந்தார் இல்லை. ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றுப் புலமைத் திறத்தோடு விளங்கினார்.

ஆசிரியப் பணி

இலக்கண இலக்கியங்களை முறையே கற்றுத் தேர்ந்த பாண்டியனாரை ஊர்ப் பெருமக்கள் ''தாங்கள் ஆசிரியராய் இருந்து இளைஞர்களுக்குக் கல்விக் கண் திறக்க வேண்டுமென்று'' பரிவோடு வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய அன்புரையை ஏற்று அவ்வாறே ஆசிரியப் பணியைப் பாண்டியனார் மேற்கொண்டார். இளைஞர்களுக்குப் படிப்பு முறைகளைப் பண்போடு சேர்த்துக் கொடுத்தார். நல்வழி, நன்னெறி, நீதி நெறி, விளக்கம் போன்ற பாடங்கள் கற்பிக்கப் பெற்றன. உடல் தூய்மையோடு ஒழுங்கு, பணிவு முதலியவற்றையும் பாண்டியனார் தம் மாணாக்கருக்குக் கற்பித்தார். இளையவரேயன்றி முதியோர் சிலரும் வெளியூர்மக்கள் சிலரும் இவரிடம்பாடம் கேட்டுச் சிறப்பு அடைந்தனர். இவரிடம் பாடம் கேட்டுச் சிறந்தவர்களுள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறையில் பணியாற்றிய வெங்கடராஜுலு ரெட்டியாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமணம்—குழந்தைகள்

பாண்டியனாருக்கு 27ஆம் வயதில் திருமணமானது. இல்லறத்தை நல்லறமாய்நடத்திவந்த இவருக்குமூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். இவர்கள் பாண்டியனாரின் தமிழ்ப்பணிக்கு பெரிதும் உறுதுணைப் புரிந்தனர். பாண்டியனார் என்னும் பேராலின் விழுதுகளாய் இன்று இவர்கள் நிலைப்பெற்று விளங்கித் திகழ்கிறார்கள்.

கவிபாடும் திறன்

பாண்டியனார் இளமையிலேயே கவிபாடும் திறன் மிக்கவராய் விளங்கினார். பெரிய பெரிய பொருள்களைக் கூட எளிய இனிய கவிகளாய் பாடிக்காட்டி அனைவரையும் தமிழ் இன்பத்தில் ஆழ்த்திவிடும் புலமை இவருக்கு இளமையிலேயே வாய்த்திருந்தது. 1920 இல் கோவை மாவட்டம் பேரூரில் ஒரு கவிதைப் போட்டி நடந்தது. ''பஞ்சாங்கம் பார்க்கப்படும்'' என்ற ஈற்றடியைக் கொடுத்து மூன்று மணித் துளிகளுக்குள் அப் பாடலைப் பாடி முடித்துவிட வேண்டும் என்பதுதான் போட்டி. பெருங்கவிஞர்கள் மூவர் இப் போட்டியில் கலந்து கொண்டனர். வ. உ. சிதம்பரனாரும், கம்பநாடன் பத்திராதிபர், மெ. வெ. கோவிந்தராஜ ஐயங்காரும் நடுவராய் இருந்தனர். இருவர் கவி பாடி முடித்த பின்னர் பாண்டியனார் முறை வந்தது. இவர் சிறிதும் அச்சமின்றிப் பாடலைப் பாடத் தொடங்கினார்.

வான்மதியும் கான்மானும் வன்முயலும் பாதலத்தோர்
கோன்குலமும் தீயுமொன்றில் கூடுமோ—ஏன்கூடா
நஞ்சாங் கமரருய்ய நல்லமுதாக் கொண்டபரன்
பஞ்சாங்கம் பார்க்கப் படும்.

வானில் உலாவும் சந்திரன், கானில் வாழும் மான், முயல், பூதலத்து வாழும் பாம்பு, தன்னையடுத்த எதையும் சுட்டு எரிக்கிற தீ ஆகிய ஐந்தும் ஓரிடத்தில் ஒன்றாய்க் கூடுமோ? "கூடும்"; தேவர் உய்ய நஞ்சினை அமுதமாக உண்டு அருளிய சிவபெருமானின் தலை, கால், கை, நெற்றி கழுத்து என்னும் ஐந்து அங்கங்களையும் பார்த்தால் அவ்வைந்தும் ஒன்றுகூடி இருப்பது புலனாகும் என்பது இப் பாடலின் பொருள். இப்பாடலைக் கேட்ட நடுவர்களும் அவையோரும் மூன்று மணித்துளிகள் அல்ல மூன்று ஆண்டுகள் முயன்று பாடினாலும் இக்கவியே வெற்றி யுடையது எனப் பாராட்டிப் புகழ்ந்தனர். இளமை

யிலேயே இத்தகைய கவித்திறன் மிக்கவராய் இவர் விளங்கியதால்தான் பிற்காலத்தே தமிழ் நூல்கள் பற்பல இவரிடமிருந்து உலகுக்குக் கிடைக்கப்பெற்றன.

விருதுகள்

இவரது கவித் திறத்தைப் பாராட்டிய அறிஞர் பலரும் இவருக்குப் பற்பல பட்டங்களை வழங்கி மகிழ்ந்தனர். கவிச்சக்கரவர்த்தி, கவிராச பண்டிதர், கவிஞர் மாமணி என்ற விருதுகள் இவற்றுள் சில.

இலக்கியத் தொண்டு

பாண்டியனாரின் இலக்கியத் தொண்டு எண்ணி எண்ணிப் பாராட்டத் தக்கது. ஆசிரியராய் இருந்து இளைஞர்களுக்கும், பெரியவர்களுக்கும் தமிழறிவு ஊட்டிய தகையாளர் செகவீர பாண்டியனார். சொற்பொழிவுகள் ஆற்றுவதின் வாயிலாகவும், தமிழ்த் தொண்டு புரியும் பணியை மேற்கொண்டு வந்தார். இவ்வகையில் பால காண்டம் முதல் பட்டாபிடேகம் வரை அனைவரும் வியக்கும் வண்ணம் இவர் ஆற்றிய இராமாயண சொற்பொழிவு இவருடைய முதல் சொற்பொழிவாய் அமைந்து பெருமை சேர்த்தது. தொடர் சொற்பொழிவு, தனிச் சொற்பொழிவு, வானொலிச் சொற்பொழிவு, அயல் மாநிலச் சொற்பொழிவு, வெளிநாட்டுச் சொற்பொழிவு என்னும் நிலைகளில் இவர் தம் இலக்கியத் தொண்டு பரந்து விரிந்தது. இராமாயணம், கந்தபுராணம் போன்ற தொடர் சொற்பொழிவுகளும், தமிழர் வீரம், மன நலமும் மனிதனும், திருவாசகத்தில் ஒரு வாசகம் போன்ற பொருள் களில் அமைந்த தனிச் சொற்பொழிவுகளும் இவருக்குப் பெருமை சேர்த்தன. சொற்பொழிவுகளுக்கு இவர்

தலைப்புக் கொடுக்கும் முறையே தனிச் சிறப்பு வாய்ந்தது. தசரதன் தன்மையும், கைகேயியின் வன்மையும், பரதன் பண்பும்—குகன் பண்பும், சீதை நெஞ்சமும்—இராவணன் வஞ்சமும் என்பன போன்ற கவர்ச்சி மிகுந்த தலைப்புகள் தலைப்பு அளவிலேயே அவையினரைக் கவர்ந்து இழுத்தன.

கவி நிலை, தொழில் பாட்டு, புராண நூல்களில் திருக்குறள், மனை மாட்சி, காந்திவழி—புலனடக்கம், கவிதை விளக்கம், வில்லியாழ்வாரின் சந்தக் கவித்திறம் என்பன போன்ற தலைப்புகளில் இவர் ஆற்றிய வானொலிச் சொற்பொழிவுகள் குறிப்பிடத் தக்கவை.

படைப்புகள்

தாமே பயின்றும், தக்கவர்களிடம் கற்றும், புலமைத் திறன் எய்திய கவிராச பண்டிதர் பாண்டியனார் தமிழுக்குச் செய்த தொண்டுகள் தலையானது அவர் படைத்த படைப்புகளே எனலாம். ஏறக்குறைய 30 அரும் தமிழ் நூல்களை இவர் அன்னைத் தமிழுக்கு ஆக்கித் தந்துள்ளார்.

பக்தி, அறம், காப்பியம், தேசியம், தொழில், மொழி பெயர்ப்பு முதலிய பொருள்களில் செய்யுள் நூல்களையும், திறன் ஆய்வு, வரலாறு, மொழி முதலிய பொருள்களில் உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும் இவர் எழுதியுள்ள நூல்களின் விவரங்கள் இங்கே தரப்படுகின்றன.

செய்யுள்—பக்தி

1. திருச்செந்தூர் அந்தாதி
2. மாசிலா மணிமாலை

அறம்

3. அணியறுபது
4. அரும்பொருள் அமுதம்
5. தர்ம தீபிகை
6. திருக்குறட் குமரேச வெண்பா

காப்பியம்

7. வீரபாண்டியம்

தேசியம்

8. இந்தியத் தாய் நிலை
9. பாரத நாட்டு வீரர்
10. வீர தேவதை வணக்கம்

தொழில்

11. உழவும் உலகமும்

மொழிபெயர்ப்பு

12. உலக உள்ளங்கள்

உரைநடை—திறனாய்வு

13. கம்பர் கவித்திறம்
14. கம்பன் கலை நிலை

வரலாறு

15. அகத்திய முனிவர்
16. எனது வாழ்வு
17. கவிகளின் காட்சி
18. தமிழர் வீரம்
19. தெய்வப் புலவர்
20. பாஞ்சாலங் குறிஞ்சி வீரர் சரித்திரம்
21. முருகவேள்

மொழி

22. நமது தாய் மொழி

பிற

23. உயிரினங்கள்
24. உள நிலை
25. ஒழுக்கம்
26. கல்வி நிலை
27. சந்தம்
28. தாயின் தகைமை
29. மனிதனும் தெய்வமும்
30. மூன்று ஒலிகள்

இந்நூல்கள் கவிராச பண்டிதரின் பெரும் புலமைக்குச் சான்று பகர்வனவாய் விளங்குகின்றன. திருவள்ளுவர் இயற்றிய 1330 அருங் குறளுக்கும் விளக்கமும் விரிவும் தரும்.

வகையில் இவர் இயற்றியுள்ள நூல் திருக்குறள் குமரேச வெண்பா ஆகும். ஒவ்வொரு குறளுக்கும் ஒரு பொருத்தமான கதை நிகழ்ச்சியை, வரலாற்றை—செய்தியை முதல் இரண்டு அடிகளில் சுட்டிக்காட்டி அதற்குரிய குறளின் இரண்டு அடியையும் பின்னால் முடித்து, 4 அடி வெண்பாவாக அமைந்திருக்கிறது இந்நூல். 1332 வெண்பாக்களால் அமைந்து திருக்குறளின் பெருமையை உலகிற்கு மேலும் உயர்த்திக் காட்டுகின்றன இப்பாடல்கள். இவர் பெற்றிருந்த கடவுள் பக்தி, மொழிப்பற்று, நாட்டுப் பற்று, சமுதாயப் பற்று, ஆராய்ச்சித் திறன், வரலாற்று அறிவு, முதலியவற்றுக்கு இந்நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாய் விளங்குகின்றன.

பதிப்புப் பணி

படைப்புகள் முப்பதுள்ளும் தமிழர் வீரம், மாசிலா மணிமாலை ஆகியவை நீங்கலாக பிறவற்றைத் தாமே பதிப்பாசிரியராக இருந்து பல்வேறு இன்னல்களுக்கிடையே கவிராசர் பதிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

''எந்தப்பதிப்பகத்தின் உதவியையும், யாருடைய
பொருள் சகாயத்தையும் எதிர்பாராமல்
அரும்பெரும் நூல்களை எழுதித் தம் இல்லத்திலேயே
அச்சுக் கோத்து, மெல்ல மெல்ல நூலாக்கி
வெளியிடும் இவரது நிதானத்தையும், தைரியத்தையும்
எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது.
புத்தகம் எழுதுவதையும் அச்சிடுவதையும்,
வெளியிடுவதையும்
மிகப் பரப்பரப்புள்ளதோர் இயந்திர இயக்கமாக்கி
விடாமல் காந்திய நெறியில் நின்று குடிசைத்
தொழில் போல் நடத்தி வருகிறார் செகவீர
பாண்டியனார்.''

என்ற கூற்றிலிருந்து (தமிழுக்கு ஒருவர்—பக். 16) இவர் தம் பதிப்புப் பணியை நன்கு அறிந்து கொள்ளலாம். அச்சு

இயந்திரமும் பிறர் உதவியும் அதிகமாகக் கிட்டாத காலத்திலேயே தன்னுடைய விடாமுயற்சியாலும், உழைப்பாலும் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட நூல்களைப் பதிப்பித்து இவர் வெளியிட்டு இருப்பது பாராட்டிப் போற்றப்பட வேண்டிய பெரும் தொண்டாகும். இவர் பதிப்பித்த நூல்களுள் திருக்குறட் குமரேச வெண்பா அளவால் மிகப் பெரிய நூலாகும். 5990 பக்கங்கள் கொண்ட இந்நூலை இவர் 14 ஆண்டுகள் இடைவிடாத முயற்சியால் செய்து முடித்தார் என்று அறியும்போது மெய்சிலிர்க்கிறது. இதை அவர், ''ஏழிரண்டு ஆண்டில் வா! என்று ஊழ் சொன்னபடி ராமன் அயோத்திக்கு வந்தான். அதுபோல் இந்த நூலும் உலகம் காணச் சொந்தமாய் வந்துள்ளது என்று நான் சிந்தை களித்து வருகிறேன்'' என்று அவரே குறிப்பிடுவதிலிருந்து இவ்வரிய முயற்சியை நாம் அறிய முடியும். இந்த நூல் வெளியீட்டால் இருந்த பொருளையும் இழந்து நின்றார் கவிராசர். இந்நேரத்தில் எவ்வகையிலும் தமக்குத் துணையாயிருந்த மனைவியாரும் மறைந்தார். புலமையாளரிடமே உரிமை கொண்டாடும் வறுமை பாண்டியனாரையும் பற்றி நின்றது. எவரிடத்தும் ஏதும் இரந்து பெற்றறியாத கவிராசர் உண்ணவும் வழியின்றி உள்ளம் வருந்தி வீட்டின் உள்ளேயே சோர்ந்திருந்தார். அப்போது இதற்கு முன் கண்டறியாத ஒருவர் வந்து அவருக்கு உதவி செய்ததும் பாண்டியனாருக்கு வியப்பு ஏற்பட்டது. அவர் பெயர் சிவசுப்ரமணிய பிள்ளை என்று அறிந்தபோது நெஞ்சம் நெகிழ்ந்தது. இதை, ''எவ்வழியும் காப்பாரே வேளாளர் காண் என்று கம்பர் கூறியுள்ள இந்த அன்பு வாசகம் என் நினைவுக்கு வந்தது. இன்பம் விழைந்தது. வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலையும் வெள்ளாளர்களையும் உள்ளம் உவந்து அக்கவிஞர் பெருமான் பாடியிருப்பது அவர்களது உபகார நேர்மைகளைச் சீர்மையாய் விளக்கி வருகிறது'' என்று கவிஞரே குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

மாட்சிமைப் பண்புகள் :

மனைவியை இழந்து தனியே வாழ்ந்த பாண்டியனாரிடம் சிலர் மறுமணத்திலுள்ள அறங்களை எடுத்துக் கூறி திருமணத்திற்கு உடன்படுமாறு வேண்டினர். அவர்களிடம் "இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்றஇராமனின் கூற்றை எடுத்து மொழிந்து திருப்பி அனுப்பித் தூய நிலையிலேயே தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார். இவர் சமுதாயத்தோடு உறவு கொள்வதில் கண்டிப்பானவராக இருந்திருக்கிறார் என்று தெரிகிறது. "யாரிடமும் நான் நெருங்கிப் பழகி உறவு கொள்வதில்லை; எவரிடமும் யாதொரு உதவியும் யாண்டும் நாடியதில்லை" என்று அவரே கூறுவதிலிருந்து அவருடைய உள்ளத் திண்மையை அறிய முடியும். தாம் வாழ்ந்த காலம் தமிழ்நாட்டில் தோன்றிய சீர்திருத்த இயக்கத்தின் செல்வாக்கு மிகுந்த காலமாக இருந்தாலும் அறம், ஒழுக்கம், நீதி, பண்பு முதலியவற்றைக் கொண்ட சமயஞ்சார்ந்த நூல்களையும் சமுதாய சீர்திருத்த நூல்களையும் படைத்து அளித்தார் இப்பண்டிதனார். நம் நாட்டு மக்கள் கேடான வழிகளில் பழகி வருவதைக் கண்டு உள்ளம் வெதும்பி

> செவ்வாய்கள் கருகிவரச் சீரழிவு
>   பெருகிவரச் சிறுமை யாவும்
> எவ்வாயும் ஏறிவர இழி நாற்றம்
>   நாறிவர ஈனமாக
> வெவ்வாயர் புகைகுடித்து வெறிமிகுந்து
>   அறிவழிந்து வெளியே நீண்டு
> ஒவ்வாத பழக்கத்தால் ஒரு நாளும்
>   இல்லாமல் உழல்கின் றாரே

என்று பாடியுள்ளார். இவைகள் இவரது மாட்சிமைப் பண்புகளுக்கு சான்றுகளாய் விளங்குகின்றன.

செம்மாந்த உள்ளம் :

திருக்குறட்குமரேச வெண்பா நூலாகி வெளிவந்த போது சிலர் புறம் பேசினர். நேரில் காணும்போது மாறு பாடும் வேறுபாடும் பாராட்டாதவர்கள் புறத்தே இருந்து புல்லிய மொழி பேசுவது அவர் நெஞ்சை வாட்டியது. ஆயினும் இச்சுடு சொற்களுக்கு எதிராகத் தாமும் அச் சொற்களைப் பயன்படுத்தினாரில்லை. "சொல்லாலோ, செயலாலோ யாருக்கும் யாதொரு இடரும் புரியாத எனக்கு ஏன் அவர்கள் அவ்வாறு இடையூறுகள் கூறுகின்றனர்? என்று என் உள்ளேயே நான் எண்ணிப் பார்த்தேன். ;மனித சுபாவங்களின் மருமங்களை நினைந்து வருந்தினேன்" என்று அவர் கூறுவதிலிருந்து அவரின் பண்பட்ட உள்ள நிலையை— செம்மாந்த உள்ளத் திண்மையை— திருக்குறள் நெறி போற்றி வாழும் சீர்மையை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

மொழிப் பற்று :

கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் தமிழ்ப் பற்று மிக்கவராய் விளங்கினார். இப்பற்றுதலே அவரது படைப்புகள் வெளி வருவதற்குத் தூண்டுகோலாய் ஊக்கம் அளித்தன. குறிப்பாகத் திருவள்ளுவர், கம்பர் இருவர் மீதும் பாண்டியனாருக்குத் தனிப் பற்று இருந்தது. இதை, "திருவள்ளுவரும், கம்பரும் எனக்கு மிகவும் பிரியமான உரிமையாளராய்ப் பெருகி வந்தனர்...வள்ளுவர் எனக்கு நெருங்கிய பாட்டனாராய் நேரே தெரிய வந்தார். கம்பர் அன்புரிமையான மாமனாராய் யாண்டும் அணுகி நின்றார்" என்று அவரே கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பாராட்டுகள்

செகவீர பாண்டியனாரைப் பாராட்டாத சான்றோர்களே இல்லை எனலாம். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர், மறைமலையடிகள், ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற சான்றோர்களும், பேராசிரியர்கள் பலரும், அரசியல் தலைவர்கள் பலரும், அமைச்சர்கள் பலரும் இவரை—இவர்தம் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

இவர் நூல்களைச் சென்னை, மைசூர் பல்கலைக் கழகங்கள் பாட நூலாகவும் ஏற்றுள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகம் இவர்தம் அரும் தொண்டினைப் பாராட்டி பரிசு அளித்துள்ளது. மதுரை, கரந்தை தமிழ்ச் சங்கங்கள் இவர் தம் தொண்டினைச் சிறப்பித்துள்ளன. இவர்தம் பணிக்கு உயர்வு அளிக்கும் வண்ணம் தமிழக அரசு 1966இல் இவரை மதுரைப் பல்கலைக்கழகக் குழுவில் ஒருவராக நியமித்து சிறப்பளித்தது. இச்சீரிய பணியை ஓர் ஆண்டு திறமையுடன் நிறைவேற்றிச் சிறப்புப் பெற்றார் கவிஞர்.

மறைவு

81 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த இப்பெரியார் ஏறக்குறைய 60 ஆண்டுகள் முழுமையாக தமிழ்ப்பணி செய்வதிலேயே கழித்திருக்கிறார் என்று எண்ணும்போது உண்மையிலேயே நம்முடைய உள்ளம் பூரிப்பு அடைகிறது. அவர்தம் தொண்டினைப் போற்றி மதித்துப் பாராட்டுகிறது; இப்பெரியார் 1967 ஜூன் திங்கள் 17ஆம் நாள் இயற்கை எய்தினார். இவர்தம் அரும் தொண்டு அனைவராலும் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

தமிழக அரசு

தமிழ்ப் பெரியார்களைப் போற்றிப் பாராட்டி அவர்தம் தொண்டினை உலகறியச் செய்யும் உயர் நோக்கத்தைக் கொண்டிருக்கும் தமிழக அரசு அந்த வரிசையில் தற்பொழுது கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனாரின் நூற்றாண்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கிறது. கவிராச பண்டிதரின் அரிய படைப்புகளுள் சில முழுமையாகக் கிடைக்கின்றன. சில சிற்சிலவே கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் முழுமையாக வெளிக்கொணர்ந்து பயன்படும் வண்ணம் செய்ய வேண்டியது தமிழறிஞர்களின் பொறுப்பாகும்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

என்ற குறளுக்கு இலக்கியமாக, தோன்றிய பொழுதே புகழோடு தோன்றிய இப்பெரியார் தம் வாழ்க்கை முழுவதும் வாழ்ந்து காட்டி என்றென்றும் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்றிருக்கிறார்.



மூவேந்தர் அச்சகம், சென்னை-14

மன்னராயிருந்தாலும் மந்திரியாய்
இருந்தாலும் மதிமாண்போடு
தன்னுடைய நாட்டிலுள தாய்மொழியைப்
பேணாரேல் தன்னைப் பெற்ற
அன்னைதனைப் போற்றாத அழிமக்கள்
ஆகவே அவலம் எய்தி
இன்னலுடன் இழிவதல்லால் ஏற்றமிகப்
பெறுதல் தான் யாண்டும் இன்றே

—செகவீர பாண்டியனார்

மூவேந்தர் அச்சகம், சென்னை-14